

சென்னை, கொரட்டூரில் 25ஆவது தெருவில் அமைந்துள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அடுக்கு மாடி குடியிருப்பில் 2 பிளாக்குகளில் கடந்த வெள்ளி அன்று அதிர்வு ஏற்பட்டதாக செய்தி வெளியானது. மறுநாளே வீட்டு வசதி வாரிய அதிகாரிகள் குடியிருப்பை ஆய்வு செய்ததுடன் அண்ணா பல்கலைக்கழக வல்லுநர்கள் கொண்ட குழு அமைத்து ஆய்வு செய்யவும் ஆவன செய்தனர். இந்நிலையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை (பொறுப்பு) அமைச்சர் முத்துசாமி. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் நேற்று (31.07.23) அந்த குடியிருப்பை நேரில் ஆய்வு செய்து குடியிருப்புவாசிகளின் கோரிக்கைகளை கேட்டுக்கொண்டனர். ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், தலைமை பொறியாளர் கண்ணன், மேற்பார்வை பொறியாளர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட துறை உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### மகாத்மா காந்தி குறித்து

# ஆர்.எஸ்.எஸ்.பேர்வழி சம்பாஜி பிடேவின் இழிவான கருத்துக்கு கடும் கண்டனங்கள்!

## உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என காங்கிரஸ் கோரிக்கை!

அமராவதி, ஆக 1-

மகாத்மா காந்தியின் உண்மையான தந்தை ஒரு முஸ்லீம் நிலச்சுவான்தார் என்று மகாராஷ்டிரா மாநிலம் சங்க்லி பகுதியைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ். பேர்வழியான சம்பாஜி பிடே, வாய்க்கொழுப்பாக பேசியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஷிவபிரதிஸ்தான் ஹிந்துஸ்தான் சன்ஸ்தா அமைப்பின் நிறுவனரான சம்பாஜி பிடே, ஆந்திர மாநிலம் அமராவதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசியுள்ளார்.

அந்த நிகழ்ச்சியில்தான், “மோகன் தாஸ் கரம்சந்த் காந்தியையே நாம் மகாத்மா காந்தி என்று அழைத்து வருகின்றோம்; ஆனால் கரம்சந்த் காந்தி, மோகன்தாஸின் தந்தை அல்ல. ஒரு முஸ்லிம் ஜமீன்தார்தான் அவரது உண்மையான தந்தை” என்று அவர் குறிப்பிட்டு உள்ளார்.

“இந்தியா ஒரு இந்து நாடு. இந்துக்களின் வீரம் மகத்தானது. ஆனால், இந்துக்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த மதம், கடமை மற்றும் பொறுப்புகளை மறந்து விடுவதால் அவர்கள் சீரழிந்து விட்டார்கள்” என்றும் போலிக் கண்ணீர் வடித்துள்ளார். பிடேவின் இந்தக் கருத்துக்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

பிடேவுக்கு பதிலளித்துள்ள காங்கிரஸ் தலைவரும், மகாராஷ்டிரா மாநிலம் சங்கம்னேர் தொகுதி எம்.எல்.ஏ.வுமான பாலாசாகேப் தோராட், “மகாத்மா காந்தி குறித்து பிடே மிகவும் இழிவான கருத்தை தெரிவித்து உள்ளார். இது நாட்டு மக்களுக்கு மிகவும் கவலை அளிக்கிறது. பிடே தொடர்ந்து இதுபோன்ற கேவலமான அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். அவருக்கு யார் சரியாக ஆதரவு அளிக்கிறார்கள் என்பதை கண்டு பிடிக்க வேண்டும். பிடேயின் நோக்கம் என்ன என்று தெரிய வேண்டும். யாருடைய அரசியல் நலனுக்காக அவர் மீண்டும் மீண்டும் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுகிறார்? பிடே மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி சார்பில் கோரிக்கை வைக்கிறேன். இந்த விவகாரத்தில், அரசு விரைந்து செயல்பட்டு பிடே மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் முழுநேர ஊழியராக இருந்தவரான சாம்பாஜி உளறல்களுக்குப் பெயர் போனவர். தனது தோட்டத்தில் விளையும் மாம்பழங்களைச் சாப்பிடும் பெண்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் என்று கடந்த 2018ஆம் ஆண்டு, சாம்பாஜி கிளப்பிய சர்ச்சை நீதிமன்ற வழக்குவரை சென்றது. 2018ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று பீமா கோரே கானில் தலித்துக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சாதிய வன்முறையிலும் சம்பாஜி பிடே ஒரு குற்றவாளி என்பது குறிப்பிடத்தக்கது.

### ‘கொள்கைப் படையால் இனப்பகையை முறியடிப்போம்’ என

# முதல்வர் கூறியதன் பின்னணியில் - ஒரு நீண்ட வரலாறு உண்டு!

## ‘விடுதலை’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக.1

‘தி.மு.க. , தி.க.வை நோக்கிச் செல்கிறது. மு.க.ஸ்டாலின் வீரமணியிடமிருந்து விலகி நிற்க வேண்டும்” என குருமூர்த்திகள் ‘துக்ளக்’கில் எழுதுவதற்குப் பதிலடியாக; ‘கொள்கைப் படையால் இனப்பகையை முறியடிப்போம்’ என முதல்வர் அவர்கள் கூறியதன் பின்னணியில் ஒரு நீண்ட வரலாறு உண்டு என ‘விடுதலை’ நாளேடு 31.7.2023 தலையங்கத்தில் குறிப்பிட் டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

சமூக நீதிக்கான சரித்திர நாயகர் முதல் அமைச்சர் மானமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டியதைச் சொல்லியிருக்கிறார்; சுழற்ற வேண்டிய சாட்டையையும் சுழற்றியுள்ளார்.

‘கொள்கைப் படைமுன் இனப்பகையை விரட்டுவோம்’ என்ற வீச்சுதான் அது.

56 ஆண்டுகளுக்கு முன் தந்தை பெரியார் மிகச்சரியாக அறுதியிட்டுச் சொன்னார்.

“இன்றைய அரசியல் போராட்டம் என்பதே கம்யூனிஸ்டுகள் முதல் எல்லாக் கட்சிகளுக்கும் சமுதாயத் துறை தத்துவம்தான் அடிப்படை இலட்சியமே தவிர, மற்றபடி வாயால் சொல்வதற்குக்கூட கொள்கைகள் கிடையாதே! அதாவது எதுவும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற அடிப்படையைக் கொண்டதுதான்” (விடுதலை 22.5.1967) என்றார் தந்தை பெரியார்.

இப்பொழுது நாட்டில் என்ன நடந்து கொண்டு இருக்கிறது. ஒன்றிய அரசு என்பது பா.ஜ.க., தலைமையிலான ஆட்சி என்பது பார்ப்பன ஜனதா ஆட்சி தானே! இல்லை என்று மறுக்க முடியுமா?

ஒரு பிற்படுத்தப்பட்டவர் பிரதமராக இருக்கிறாரே என்று சொல்லலாம். அவர் வெறும் பம்பரம் தான். சுழற்றுவது ஆர்.எஸ்.எஸ்.ஸின் தலைமைப் பீடம் தானே.

இந்து ராஜ்ஜியம் என்று சொன்னாலும் சரி, ராமன் ராஜ்ஜியம் என்று சொன்னாலும் சரி; அது வருணாசிரமத்தை அடிப்படையாகக் கொண்ட பார்ப்பன ராஜ்ஜியம்தானே!

பூணூலைப் பிடித்துக் கொண்டு தி.மு.க.வுக்கு ஓட்டுப் போடுங்கள் என்றார் ராஜகோபாலாச்சாரியார்.

வெற்றி பெற்ற தி.மு.க. அதன் முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆச்சாரியாரையா முதலில் சந்தித்தார்? திருச்சி பெரியார் மாளிகையில் இருந்த; தான் கண்ட, கொண்ட ஒரே தலைவரான தந்தை பெரியாரைச் சந்தித்துதானே “வழி காட்டுங்கள் அய்யா அதன்படி ஆட்சியை நடத்துகிறேன்” என்று சொல்லவில்லையா?

“இந்த ஆட்சியே பெரியாருக்குக் காணிக்கை!” என்று முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் அதிகாரப்பூர்வமாக சட்டப்பேரவையில் பிரகடனப்படுத்தினாரே!

அண்ணாவுக்குப் பின் முதல் அமைச்சராக வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் “இது சூத்திரர்களுக்காக சூத்திரர்களால் ஆளப்படும் நான்காம் நிலை ஆட்சியே” என்று அறிவித்து, மனுவாதி சரித்திரத்திற்கு சமாதி கட்டினாரே! (28.7.1971)

1971 தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தலுக்கு சில வாரங்களுக்குமுன் திராவிடர் கழகத்தால் சேலத்தில் நடத்தப்பட்ட மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் ராமன் படத்திற்கு தி.க.வினர் செருப்பால் அடித்தனர் என்று கூறி ராஜாஜி தலைமையில் பார்ப்பனர்கள் எல்லாம், பார்ப்பனப் பத்திரிகைகளெல்லாம் கூப்பாடு போடவில்லையா?

தி.மு.க. தோற்கும் என்று கூறி, நிழல் அமைச்சரவை ஏற்பாடு என்கிற அளவுக்குச் சென்றதுண்டே!

தேர்தல் முடிவு என்னவாக இருந்தது? 1967 தேர்தலில் 138 இடங்களில் வென்ற தி.மு.க. சேலம் நிகழ்வுக்குப்பின் நடைபெற்ற 1971 தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தலில் 184 இடங்களைக் கைப்பற்றியதே!

அப்பொழுது முதல் அமைச்சர் மானமிகு கலைஞர் என்ன சொன்னார்? “பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தை பெரியார் முன்பு துவக்கினார். இந்தத் தேர்தலில் ஆச்சாரியார் துவக்கியுள்ளார். இந்தத் தேர்தலின் ஒரே புதிய அம்சம் இதுதான்” என்று திருச்சியில் செய்தியாளர்களிடம் கூறினார் முதல் அமைச்சர் கலைஞர் (3.3.1971).

‘நாட்டில் நடக்கும் போராட்டம் எதன் அடிப்படையில்’ என்று 56 ஆண்டுகளுக்குமுன் தொலைநோக்கோடு தந்தை பெரியார் சொன்னது பலித்துவிட்டதே!

இப்பொழுது தி.மு.க. ஆட்சியை எதிர்ப்பவர்கள் யார்? தி.மு.க.வை எதிர்க்கும் ஏடுகள், இதழ்கள் எவ்வினத்தைச் சேர்ந்தவை?

‘தி.மு.க., தி.க.வை நோக்கி செல்கிறது. மு.க. ஸ்டாலின் வீரமணியிடமிருந்து விலகி நிற்க வேண்டும்’ என்று குருமூர்த்திகள் ‘துக்ளக்’கில் எழுதுவதன் பொருள் என்ன?

அதற்குப் பதிலடியாக ‘நேற்றும் சரி, இன்றும் சரி, நாளையும் சரி’ எங்களை வழி நடத்துவது பெரியார் திடல்தான்’ என்று பகிரங்கமாக அறிவித்து விட்டாரே! தந்தை பெரியார் பிறந்த நாளை சமூகநீதி நாளாக அதிகாரப்பூர்வமாக அறிவித்து அய்.ஏ.எஸ். பார்ப்பனர் வரை உறுதி மொழி எடுக்கச் செய்துவிட்டாரே!

‘திராவிட மாடல்’ ஆட்சி என்பது இதுதானே... இதனைப் புரிந்துகொண்டு தானே முதல் அமைச்சர் மீதும், தி.மு.க.வின் மீதும் தி.மு.க. ஆட்சியின் மீதும் சேற்றை வாரி இறைக்கிறார்கள்.

கொள்கைப் படையால் இனப்பகையை முறியடிப்போம் என்று முதல் அமைச்சர் கூறி இருப்பதன் பின்னணியில் ஒரு நீண்ட கால வரலாறு உண்டு.

இளைஞர்களே எழுவீர்! இனப்பகையை அடையாளம் காண்பீர்!

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

**நன்றி**
**விடுதலை**
31.7.2023

### ஒரத்தநாடு கிழக்கு ஒன்றியச் செயலாளர்

# ஜெ.கார்த்திகேயன் தாயார் ஜெ.ரோகிணி மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!

தஞ்சை, ஆக.1-

தஞ்சாவூர் மத்திய மாவட்டம், ஒரத்தநாடு கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.கார்த்திகேயன் தாயார் ஜெ.ரோகிணி அம்மையார் நேற்று (31.07.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். செய்தியறிந்ததும் கழக முன்னணியினர் திரளாகச் சென்று மறைந்த திருமதி ஜெ.ரோகிணி அம்மையார் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (01.08.2023) ஒரத்தநாடு, தெலுங்கன்குடிகாடு கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.எழும்பூர் தெற்கு பகுதி, 108 அ வட்டம் சேத்துப்பட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தமிழக முதல்வர் கோப்பைக்கான குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. வெற்றிப்பெற்ற வீரர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் கோப்பைகளை அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழங்கினார். வட்டத் துணைச் செயலாளர் எம்.குறளரசன் தலைமையில், எழும்பூர் தெற்கு பகுதிச் செயலாளர் வி.சுதாகர், 8வது மண்டல குழு தலைவர் கூபிஜெயின், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், எல்.சுந்தர்ராஜன் எம்.சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., நிர்மலா தேவி, எஸ்.ரசூல், டி.வி.வேலு, ஜெகதீசன், அன்னபூரணி, வட்ட கழக செயலாளர்கள் வி.விஜயகுமார், ஆர்.பாபு (எ) சந்திரசேகரன், இ.மொய்தீன், டால்ஃபின் ஹரி, வான்மதி கதிரவன் உள்ளிட்ட எழும்பூர் தெற்கு மற்றும் வடக்கு பகுதி மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!

## (ஜூன் - 2023 - ஜூன் 2024)
## ஆகஸ்ட் மாத நிகழ்வுகள் 2023



| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 04/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்குபுகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 38,38A காட்டூர் பகுதி | சி.தமிழ்மணி அ.மன்சூர் அலி | ஒப்பிலாமணி தலைமைக் கழக பேச்சாளர் |
| 06/08/2023 9.00 காலை | மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் ஆங்கில கருத்தரங்கம் | மாவட்ட மருத்துவர் அணி | டாக்டர் என்.சுரேஷ் பாபு மாவட்ட அமைப்பாளர் தொகுதி அமைப்பாளர்கள் எம்.சந்தோஷ் குமார் ரா.முஹமது மன்சூர் A.பால்வண்ணன் | டாக்டர் எழிலன் நாகநாதன் M.L.A மாநில செயலாளர் |
| 11/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 44,44A பொன்மலை பகுதி | எம்.சுப்ரமணி எஸ்.சேசுராஜ் (எ) துரை | பவானி கண்ணன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 13/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் பொதுக்கூட்டம் | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி ஒன்றிய செயலாளர் | ஈரோடு முத்துசாமி, ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் |
| 20/08/2023 10.00 காலை | மருங்காபுரி தெற்கு ஒன்றியத்தில் 15 ஊராட்சிகளிலும், தலைவர் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டு அமைத்து கொடியேற்றுதல் | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | சி.சின்ன அடைக்கண் ஒன்றிய செயலாளர் | தெற்கு மாவட்டக் கழக செயலாளர் |
| 20/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் பொதுக் கூட்டம் | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | மா.சுப்ரமணியன் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் |
| 21/08/2023 9.00 காலை | தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரை போட்டி | மாவட்ட, மாநகர இலக்கிய அணி | புலவர் ந.ப.மனோகரன் மாவட்ட அமைப்பாளர் ஜெ.சரவணன் மாநகர அமைப்பாளர் | வி.பி.கலைராஜன் EX.M.L.A. மாநில செயலாளர் |
| 22/08/2023 8.00 காலை | திருவெறும்பூர் தொகுதியில் மாவட்ட கழக சார்பில் 100 அடி உயர கம்பத்தில் கொடியேற்றுதல் மற்றும் தலைவர் கலைஞர் குறித்த ஆய்வரங்கம் | மாவட்டக் கழகம் | தெற்கு மாவட்டக் கழக செயலாளர் | டி.ஆர்.பாலு எம்.பி. கழக பொருளாளர் ஆய்வரங்கத்தில் பங்கேற்போர் ஆளூர் ஷானவாஸ் முனைவர் சுபவீரபாண்டியன் |
| 23/08/2023 5.30 மாலை | தலைவர் கலைஞர் நினைவு மாட்டுவண்டி எல்லை பந்தயம் | மாவட்ட பொருளாளர் | என்.குணசேகரன் | தெற்கு மாவட்டக் கழக செயலாளர் |
| 28/08/2023 6.00 மாலை | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 19,19A மார்க்கெட் பகுதி | க.வேலுமணி எஸ்.கே.சாதிக்பாட்சா | கரூர் முரளி தலைமைக் கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்டம்




திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி அடுத்த திருநின்றவூர் நகராட்சி வளாகத்தில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் 13 மின்இயங்கு வாகனம் மற்றும் 2 இலகுரக வாகனங்கள் மற்றும் கலைஞர் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 14வது திருவேங்கடநகர் முதல் மெயின் ரோட்டில் சாலை 3.5 கிலோமீட்டர் 2 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணிகளையும் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். அருகில் நகர் மன்ற தலைவர் உஷாராணி ரவி நகராட்சி ஆணையர் புகேந்திரி, நகராட்சி பொறியாளர் ருத்ரகோட்டி, நகரக் கழகச் செயலாளர் தி.வை.இரவி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, பா.நரேஷ்குமார், துணைத் தலைவர் சரளாநாகராஜ், உள்பட நகர கழக நிர்வாகிகள் நகர் மன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.